**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.56 நாள்.27.04.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 30.04.2020 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 30.04.2020 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**நகர மன்ற தீர்மான எண்.707** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :02**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை கூடுதலாக மேற்கொள்ள BHEL நிறுவனம், இராணிப்பேட்டை அவர்கள் வடிவமைத்துள்ள கிருமி நாசினி தெளிப்பான் இயந்திரம் (Mist Blowers) ஒரு எண்ணிக்கை வாங்கவும் அதற்க்கான தொகை ரூ.3,54,000/– பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை முன் அனுமதி பெற்று BHEL நிறுவனத்துக்கு வழங்க வேண்டி மன்றப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.819/இ1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.708** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா பாதிப்பினை கட்டுபடுத்த, கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதிகளை தனிமைப்படுத்துவதற்கான தடுப்பு அமைப்புகள், கிருமி நாசினி தெளிக்க தேவையான சின்டெக்ஸ் டெங்க் அமைத்தல், குளோரின் இருப்பு வைக்க தேவையான 1000 லிட்டர் மற்றும் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட தொட்டிகள் வாங்கவும் கிருமி நாசினி தெளிப்பான் இயந்திரம் இயக்க தேவையான ஜெனரேட்டர் இயந்திரம் 20 KVA வாடகை அடிப்படையில் வாகனத்தின் பொருத்திடவும் அதற்கு தேவையான Fabrication Charges உட்பட அனைத்து பணிகளையும் மேற்கொள்ள ஆகும் தோராய செலவின தொகை ரூ.395000/–க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வி.சதிஷ்குமார் அவர்களின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.887/இ1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.709** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா பாதிப்பினை கட்டுபடுத்த, கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் பரவுவதை தடுக்க Mist Sprayer இயந்திரம் ராணிப்பேட்டை மாவட்டம் BHEL நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் அறிவுரை வழங்கியதை தொடர்ந்து Mist Sprayer இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கொள்முதல் செய்யப்பட்ட தெளிப்பான் இயந்திரத்தை வாகனத்தில் வைத்து இயக்குவதற்கு 20 KVA 3 Phase ஜெனரேட்டர் இயந்திரம் தேவைப்படுவதால் பணியின் அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஜி.ரவி அவர்களின் மூலம் 20 KVA 3 Phase

Kirloskar ஜெனரேட்டர் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கிடவும் தோராய செலவின தொகை ரூ.350000/—க்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.887/இ1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.710** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :05**

இந்நகராட்சியில் 2020—2021 ஆம் ஆண்டிற்கு கணினியில் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களின் டோனர்கள் இருப்பு குறைந்த அளவே உள்ளது. மேலும் புதிய டோனர்கள் வாங்கும் போது விலை மிகவும் அதிகமாக உள்ளதால் பயன்படுத்தப்பட்ட டோனர்களை Refiling செய்து கொண்டால் செலவினம் குறையும் என்பதால் டோனர்களை Refiling செய்வதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் கீழ் கண்டவாறு 08.04.2020 அன்று விலைப்புள்ளி வரப்பெற்றன.

| வ. எண் | விவரம் | கடையின் பெயர் | ஒன்றின் விலை | | |
|---|---|---|---|---|---|
| | | | Drum | Refiling | Blading |
| 1 | 88 A Toner Refilling | Sri Sai Printers & Computers service | 250 | 350 | 150 |
| 2 | 88 A Toner Refilling | Anand Computer | 300 | 400 | 225 |
| 3 | 88 A Toner Refilling | Nilavu Computers and Inverters | 350 | 450 | 250 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Sri Sai Printers & Computer Service அவர்ளுக்கு வேலை உத்திரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Sai Printers & Computer Service அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.50,000/—க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2989/பி2/2019)

**நகர மன்ற தீர்மான எண்.711** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் பாதாள சாக்கடையினால் பழுதாகியுள்ள சாலைகளை புதுப்பித்தல், JCB இயந்திரத்தினால் சேப்பனிடுதல், பூங்காவிற்கு மேற்கூரை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் மழைநீர் சால்வாய், சிறுபாலம் அமைத்தல் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள UPS பேட்டரிகளை புதியதாக பொருத்துதல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணி செய்தல் மற்றும் நில அளவையர் அறைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது, மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார் கணேஷ் நகர் 2, 3, 4–வது தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட சாலைகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.80 |
| 2. | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 கணேஷ் நகர் மற்றும் சாஸ்திரி நகர் குறுக்கு தெருவிற்கு மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 2.50 |
| 3. | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டு, வின்டர்பேட்டை, ப.உ.சண்முகம் சாலையில் மழைநீர் கல்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 4.00 |
| 4 | அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள UPS பேட்டரிகளை புதியதாக பொருத்தி இயக்கி தருதல். | 5.00 |
| 5 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பூங்கா சாலைகளில் உள்ள மேடு பள்ளங்களை JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்தல். | 5.00 |
| 6 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட காந்தி பூங்கா மற்றும் பழனிபேட்டை பூங்காவிற்கு மேற்கூறை அமைத்தல். | 2.50 |
| 7 | அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கழிப்பறை பராமரிப்பு பணி செய்தல் மற்றும் நில அளவையர் அறைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல். | 9.90 |

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.887/2018/இ1)

ந.க.எண் .887/இ1/2019

**நகர மன்ற தீர்மான எண்.712** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் :07**

இந்நகராட்சியில் 2020–2021 ஆம் நிதி ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், படிவங்கள், அச்சகத்தில் பெற வேண்டிய மனுக்கள் மற்றும் கணிணி பயன்பட்டிற்கு தேவையான டோனர்கள் மற்றும் பேப்பர்கள் ஆகியவற்றை NAPCO கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பொது நிதியிலிருந்து எழுது பொருட்கள் வாங்க ரூ.5.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.804/பி2/2020)

**நகர மன்ற தீர்மான எண்.713** **நாள்: 30.04.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**